DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No. 11/2014
****

Deposition of Witness for : PW1

Name : V. சின்னப்பநாயக்கர்

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : 06.11.2025

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் வாதி தரப்பு முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது. முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். 30.01.1991ல் 2ம் பிரதிவாதி வகையறாவிடமிருந்து நல்லசாமி நாயக்கர் பெற்ற பதிவு பொது அதிகார ஆவணம் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) வா.சா.ஆ.1 ஆகும். 23.06.1993ல் வாதி பெற்ற பதிவுகிரைய ஆவணம் நகல் வா.சா.ஆ.2 ஆகும். எனவே பிராதுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் எனது சொத்தினை 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துவிட்டார் வருடம் ஞாபகம் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு நான் தான் விபரம் சொன்னேன்.

நான் 2 பிளாட்டுகளை கிரையம் வாங்கினேன். அதில் ஒரு பிளாட்டினை 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துவிட்டார். மற்றொரு பிளாட்டினை ஆக்கிரமிப்பு செய்யவில்லை. ஆக்கிரமிப்பு செய்த பிளாட்டின் எண் என்ன என்றால் அந்த பிளாட்டின் எண் தெரியாது. கீழ்புறம் உள்ள பிளாட்டினை ஆக்கிரமித்துள்ளார். தாவா சொத்தின் நான்கு மால்கள் எனக்கு தெரியாது. வா.சா.ஆ 2 ஆவணத்தில் சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மால்கள் சரியானது தான். எனக்கு படிக்க தெரியும். நான் 49 மற்றும் 53 ஆகிய இரண்டு பிளாட்டுகளை கிரையம் பெற்றேன். 49 பிளாட்டுக்கு கீழ்புறத்தில் மணியம்மாள் மனைக்கு மேற்கே என்று மால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மணியம்மாள் குருசாமியிடம் பிளாட் வாங்கியுள்ளாரா என்றால் தெரியாது. 53 பிளாட்டிற்கு செல்லத்துரை மனைக்கு மேற்கு என்று மால் கண்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையின் 4வது பத்தியில் தபசில் சொத்தின் கீழ்புறத்தில் 1ம் பிரதிவாதியின் சொத்து உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 49 மற்றும் 53 பிளாட்டுகளுக்கு நான்கு மாலில் முறையே கீழ்புறம் மணியம்மாள் மற்றும் செல்லத்துரை நிலங்கள் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் நான் வழக்குரையில் 1ம் பிரதிவாதியின் சொத்து கீழ்புறம் உள்ளதாக சொல்லியுள்ளது தவறு என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்ற வீட்டுமனைகள் அரசிடம் அங்கிகாரம் பெறப்பட்ட லே அவுட்டா என்று கேட்டால் எனக்கு தெரியாது. நான் 1993ல் பிளாட்டுகளை கிரையம் பெற்றேன். எனது பிளாட்டிற்கு தனியாக பட்டா பெறவில்லை என்றால் 2 பிளாட்டிற்கும் தனிப்பட்ட பெற்றுள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே பட்டா பெற்றுள்ளேன். பட்டா பெற்றது குறித்து வழக்குரையில் நான் கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பட்டாவை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் யாரும் என்னிடம் கேட்கவில்லை. நான் கிரையம் பிளாட்டுகளுக்கு பட்டா பெறவில்லை என்றால் சரியல்ல. பட்டா பெறப்படாததால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி என்னுடைய பிளாட்டினை 2013 செப்டம்பர் மாதத்தில் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லியுள்ளதை பொறுத்து நான் காவல் நிலையத்தில் புகார் ஏதும் அளிக்கவில்லை.

உடப்பன்குளத்தை சேர்ந்த பஞ்சாயத்தார் 4 நபர்களிடம் சொன்னேன் அவர்களின் பெயர் ஞாபகம் இல்லை. சீனிச்சாமி நாயக்கர் மற்றும் குருசாமி நாயக்கர் ஆகியோர்களிடம் சொன்னேன் தற்போது அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்பது எனக்கு தெரியாது. எனது ஊர் சிப்பிப்பாறை அங்கு தான் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன். சிப்பிப்பாறைக்கும் சங்கரன்கோவிலுக்கும் 30 கிலோ மீட்டர் துூரம் இருக்கும். தாவா சொத்தை 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததததை உடப்பன்குளத்தை சேர்ந்தவர்கள் சொன்னார்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1ம் பிரதிவாதிக்கு சொத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதாக கூறி வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை என்றால் தெரியாது. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக 1ம் பிரதிவாதி ஆக்கிரமித்து உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என மனு தாக்கல் செய்து ஆணையர் அறிக்கை மற்றும் புலப்படம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது கிழக்கே 1ம் பிரதிவாதியின் இடத்தில் இருந்து தான் அளந்து வந்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது சர்வே எண்.526/8 மற்றும் 528/1 ல் உள்ள 3 ஏக்கர் 95 செண்ட் நிலம் முழுவதும் ஒரே காலியிடமாக தான் இருந்தது என்றால் சரியல்ல. பிளாட்டு கற்கல் இருந்தது. அதில் பிளாட்டுகளின் மனை எண்கள் எழுதப்பட்டுருக்கவில்லை. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது நான் சொல்வது போல் பிளாட்டுகளை காட்டக் கூடிய எல்லை கற்கள் இல்லாமல் ஒரே காலியிடமாக இருந்தது என்று சொன்னால் சரியல்ல.நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையை எனது வழக்கறிஞர் எனக்கு படித்து சொன்னாரா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்துக்கள் மனை சொத்துக்களாக பிரிக்கப்பட்டதற்கு வருவாய் துறை ஆவணங்களில் பதிவுகள் இல்லை என்றும் அதனால் வழக்கு சொத்தினை மனுவில் கண்ட விபரப்படி அளந்து காண்பிக்க இயலவில்லை என அளவையர் தெரிவித்ததாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது.

தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிடம் போது அடையாளம் கண்டு அளந்து காட்ட இயலவில்லை என்று தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. மீண்டும் மாவட்ட அளவையர் மூலம் சொத்தை அளக்க வேண்டும் என ஆணையர் மறு நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் தெரியாது. அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் தெரியாது. அதன் பின் நான் உயர்நீதிமன்ற கிளையில் சீராய்வு மனு எண்.1703/2022 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றாலும் அந்த மனுவும் மதுரை உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் தெரியாது. எனது மகன் தான் நடத்தினார். அதன் பின்னர் தாவா சொத்தை பிரித்து தர வேண்டும் என பரிகாரத்தை திருத்தும் பொருட்டு சீர்திருத்த மனு தாக்கல் செய்தேன் என்றாலும் அந்த மனுவை பின்னர் திரும்ப பெற்றுவிட்டேன் என்றாலும் ஞாபகம் இல்லை. அதன் பின்னர் 1ம் பிரதிவாதியின் சொத்தினையும் சேர்த்து அளக்க வேண்டும் என ஆணையர் நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்து அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு பவர் ஏஜண்ட் நல்லசாமி கிரையம் கொடுத்துள்ளார். மேற்படி வா.சா.ஆ.1 பொது அதிகார ஆவணத்தில் சர்வேஎண்.526/8 மற்றும் 528/1 ல் உள்ள 3 ஏக்கர் 95 நிலத்தை பொறுத்து பவர் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பவர் ஏஜண்ட் நல்லசாமி தான் சொத்துக்களை பல பிளாட்டுகளாக பிரித்து விற்பனை செய்தார் என்றால் சரிதான். அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் அவர் உயிரோடு பரம்புகோட்டையில் இருந்து வருகிறார். 1ம் பிரதிவாதி புல எண்.528/2ஏ யில் உள்ள 2 ஏக்கர் 22 செண்டு நிலத்தில் கீழ் கடைசியில் உள்ள 95 செண்ட் நிலத்தினை அப்பாசாமி பிள்ளை குமாரர் இராஜரத்தினம் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி அவரது சொத்தில் மாட்டு தீவனமாக சோளநாற்று பயிர் செய்து வருகிறார் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி வாங்கிய சொத்திற்கு வடபுறம் ஸ்பின்னிங் மில் உள்ளது என்றால் சரிதான். 20 அடி ரோடு உள்ளது. மேற்படி பாதை குருசாமி நாயக்கரால் போடப்பட்டது. நான் சொல்வது போல் 20 அடி ரோடு இல்லை ஸ்பின்னிங் மில் மட்டும் தான் வடபுறம் உள்ளது என்றால் சரியல்ல.

எனக்கு கிரையம் கொடுத்த குருசாமி நாயக்கரின் முந்தைய ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தானது ஆதியில் முப்பிடாதி செட்டியார் மனைவி மணியம்மாள் என்பவர் 27.10.1992ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் மணியம்மாள் இடம் வாங்கியதாக சொன்னார்கள். இராஜரத்தினத்திடம் இருந்து 1ம் பிரதிவாதி அவருடைய சொத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது. 1ம்பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கு தனியாக உட்பிரிவு ஏற்பட்டு சர்வே எண்.528/15 என உட்பிரிவு செய்யப்பட்டு தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தின் மேல்புறத்தில் வேலி போட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் நான் இடத்தை பார்த்து 5 வருடம் ஆகிறது எனது மகன் தான் பார்த்து வருகிறார். என் மகன் 1ம் பிரதிவாதி வேலி போட்டதாக சொல்லவில்லை. நான் வாங்கிய பிளாட் எண்.49 மற்றும் 53 எங்கு அமைந்துள்ளது என்று தெரியாமலேயே 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக பொய்யாக கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது சொத்தை எந்த காலத்திலும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.